ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2220/69 - 2021 මාර්තු මස 26 වැනි සිකුරාදා - 2021.03.26

*2220/69 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

4 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 2 ஆம் துணைப் பிரிவின் பந்தி (இ) இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இத்தால் குறித்துரைக்கப்பட்டவாறான நோக்கங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் ஹோட்டல் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடலாம் என குறித்துரைக்கின்றேன்.*

சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அத்தகைய மட்டுப்படுத்தல்கள் வரையில் வெளிநாட்டு நாணயத்தினை தமது உடைமையில் வைத்திருக்கின்ற இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து அத்தகைய ஆட்களுக்கு ஹோட்டலினால் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில், வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்வதற்கு இத்தால் ஹோட்டல்கள் அனுமதிக்கப் படுகின்றன.

எது எவ்வாறிருப்பினும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தினை அத்தகைய ஹோட்டல்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஏழு (7) நாட்களுக்கும் கூடுதலான காலப்பகுதிக்கு தமது உடைமையில் வைத்திருக்கக் கூடாது :

(அ) தொடர்பான ஹோட்டலின் பெயரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகருடன் திறந்து பேணி வரும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைப்புச் செய்தல் ; அல்லது

(ஆ) அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்றுவிடல்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, மாச்சு 26.*

*04-315*

1A - G 34063 — 60 (2021/03)    இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*